செ.வெ.எண்: 59 நாள்: 28-10-2017

**பத்திரிகைச் செய்தி**

தமிழ்நாட்டில் தற்பொழுது அனைத்து பகுதிகளிலும் பருவ காலங்களில் ஏற்படும் காய்ச்சல், குறிப்பாக டெங்கு காய்ச்சலால் உயிரிழப்பு மற்றும் பாதிப்புகள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. இப்பாதிப்புகளை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அரசின் மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலை பரப்புகின்ற ஏடிஸ் (Aedes) கொசுக்களை அழிக்கவும் மற்றும் கொசுக்கள் மேலும் உருவாகாமல் தடுக்கவும், மாவட்ட நிர்வாகம் சார்பாக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. எனவே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள சமுதாய கூடங்கள், அரசு குடியிருப்புகள், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், பொது கட்டிடங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள், தனியார் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதிகள், உணவகங்கள், திரையரங்குகள், விற்பனை நிலையங்கள், சுற்றுலா தலங்கள் மற்றும் பொது மக்கள்கூடும் அனைத்து இடங்கள் மற்றும் அனைத்து தனியார் குடியிருப்புகளிலும் அவரவர் தங்களுடைய் இடத்தைச் சுற்றிலும் கொசு உருவாவதை தவிர்க்க அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை 28.10.2017, 29.10.2017 மற்றும் 30.10.2017 ஆகிய 3 தினங்களுக்குள் மேற்கொண்டு, தங்களது இடங்களை தண்ணீர் தேங்கி கொசு உருவாகாத வண்ணம் அனைத்து பகுதிகளில் உள்ள குப்பைகள், பயன்பாடற்ற பொருட்கள் மற்றும் தண்ணீர் தேங்கக்கூடிய பொருட்கள் ஆகியவற்றை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும் எனவும், மேலும், இதுபோன்ற நடவடிக்கைகளை நாள்தோறும் தவறாமல் கடைபிடித்து, கொசு உற்பத்தியினால் ஏற்படும் டெங்கு / இதர நோய்கள் மற்றும் சுகாதார கேட்டினால் ஏற்படும் நோய்களை தடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 31.10.2017 முதல் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள குழுவானது, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் நாள்தோறும் ஆய்வு மேற்கொள்ளபட உள்ளது. அதுசமயம், ஏதேனும் பகுதிகளில் கொசு உருவாவது போன்ற சுகாதாரமற்ற இடங்கள் குழுவினரால் கண்டறியப்பட்டால், தொடர்புடையவர்கள் மீது மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அபராதம் விதிக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒம்/- ஜெ. இன்னசென்ட் திவ்யா
மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம்.

/ உண்மை நகல் / உத்திரவுப்படி /

மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்.

27/10/17